அவரை வகைகள்

1.துருநோய்

இந்நோய் விதை மற்றும் காய் மூலமாகப் பரவுகிறது. இந்நோய் பரதிக்கப்பட்ட இலைகள் கரும்பழுப்பு நிறமாகவும், கொடி நுனி கருகியும் காணப்படும். இதனைக் கட்டுப்படுத்த கந்தகப் பவுடரை எக்டருக்கு 25 கிலோ தூவ வேண்டும்.

2.சாம்பல் நோய்

இந்நோய் தாக்கிய இலைகளின் மேல் பாகத்தில் வெண்மையான பொடி தூவியது போன்ற வளர்ச்சி காணப்படும். காய்கள் முற்றாமல் பிஞ்சிலேயே சுருங்கி விடும். இதனைக் கட்டுப்படுத்த நனையும் கந்தகம் இரண்டு கிராமை ஒரு லிட்டர் நீரில் கரைத்து தெளிக்க வேண்டும் அல்லது எக்டருக்கு 25 கிலோ கந்தகத்தை தூவ வேண்டும்.

3.இலைப் புள்ளி நோய்

இதனைக் கட்டுப்படுத்த டைத்தேன் எம் 45 மருந்தினை 1 லிட்டருக்கு இரண்டு கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.